**நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம், உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பிகாம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழட்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மாசி திங்கள் 21 ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 135/2024**
**in**
**குற்றவியல் பல்வகை மனு எண். 459/2025**

செல்வராஜ்,
த/பெ. கந்தசாமி,
க.எண்.47, K.S. பபி இல்லம்,
ராதாகிருஷ்ணன் நகர், உடுமலைப்பேட்டை.

...மனுதாரர்/எதிரி

/எதிரி/

காவல் ஆய்வாளர்,
உடுமலைப்பேட்டை காவல் நிலையம்,
உடுமலைப்பேட்டை.
குற்ற எண்.397/2022

...எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இந்த மனுவானது 18.06.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் தானே ஆஜராகியும், இருதரப்பின் வாதத்தைக் கேட்டறிந்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்த வரை இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்,

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி இந்த மனுவை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவுகள் 239 மற்றும் 250-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**1. மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் கீழ்க்கண்டவாறு :**

(01.01) மனுதாரர்/எதிரி மீது இந்திய தண்டணைச் சட்டம் 294(b), 506(i) மற்றும் 4 of TNPHW Act-ன் படி எதிர்மனுதாரர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரின் கையொப்பம் மோசடியாக

உருவாக்கப்பட்டதாக பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 397/2022 உள்ள சங்கதிகள பணம் வரவு, செலவு சம்பந்தமான சிவில் சார்ந்த பிரச்சனையும் குற்ற எண்.396/2022ன் குற்ற சம்பவத்தில் கும்பலாக ஈடுபட்டவர்களையும் தன்னையும் காப்பாற்றுவதற்காக ஜோடிக்கப்பட்ட பொய் புகார் என்று குறிப்பிட்டுள்ளார்.

(01.02) மேலும், சாட்சி 1 ஆனவர் அவரது வாக்குமூலத்தில் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார் என்பதும், அவர் கணவர் வந்த நேரமும் குறிப்பிடவில்லை என்றும், மருத்துவமனைக்கு அழைத்து சென்ற நேரமும் குறிப்பிடபில்லை என்றும், அட்மிசன் காலதாமதம் உள்ளது குறித்து சந்தேகம் உருவாகியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் முரண்பட்டுள்ளது என்றும், செல்வராஜ் என்பவர் தோட்டத்திற்கு வந்ததாக சொல்லியுள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லவில்லை என்றும், 161(3) வாக்குமூலம் வாங்கிய நேரமும், இடமும் குறிப்பிடவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(01.03) மேலும், சாட்சி–2ன் வாக்குமூலத்தில் பிரச்சனை செய்து கெள்வதாக கேள்விப்பட்டு சம்பவ இடத்துக்கு எத்தனை மணிக்கு வநதார், எப்போது சமாதானம் செய்தார் என்று நேரம், எப்போது சமாதானம் பேசி முடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடவில்லை என்றும், சாட்சி–1 பிரேமலதாவின் வாக்குமூலத்தில் சாட்சி–2 வேலுசாமி சம்பவம் இடம் வந்ததாக புகாரிலோ வாக்குமூலத்திலோ இல்லை என்றும், சாட்சி–2 சம்பவத்தை பார்த்ததாக வாக்குமூலத்தில் எங்கும் இல்லை என்றும் உடனிருந்ததாகவும் கூறவில்லை என்றும், சாட்சி–1 ஆனவர் வாக்குமூலத்திற்கு முரணாக கூறியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.04) மேலும் சட்சி–3 ஆனவர் சம்பவ இடத்தில் எங்கள் ஓனர் மணியும் அவரது மனைவி மற்றும் மகனும், கொழுமம் இந்து முன்னனி அமைப்பை சேர்ந்த காளிமுத்து, ராமசாமி, பிரவு என்பவர்கள் இருந்தார்கள், 6 பேர் இருந்தார்கள் என்றும், இதற்கு முரணாக சாட்சி–1 சம்பவம் நடக்கும் போது சாட்சி–3 மட்டுமே இருந்ததாக கூறியுள்ளார் என்றும், பின்னிட்டு ஓனர் மணி தன்னிடம் வாயில் பேசிக்கொண்டிருந்ததற்கே செல்வராஜ் உடுமலை அரசு மருத்துவமனைக்கு போய் நாங்கள் அடித்து விட்டதாக கூறி ஆஸ்பத்திரியில் படுத்துள்ளார் என்று சொன்னதாகவும், இந்நிலையில் பிரேமலதா பொய் புகார் கொடுத்துள்ளார் என்பது தெரியவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

(01.05) மேலும், சாட்சி–4 ஆனவர் வாக்குமூலத்தில் பார்வை மகசரில் நேரம் குறித்து முரண்பாடுகள் உள்ளது என்றும், புலன் விசாரணை அதிகாரி முரண்பாடான நேரமுடைய மோசடியான பார்வை மகசரையே தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சி–6ன் வாக்குமூலத்தில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் மற்றும் அடையாளம் தெரியாத இருவர் வாதியை அடித்துவிட்டதாக கூறியுள்ள நிலையில் சாட்சி–1ன் வாக்குமூலத்தில் ஒருவர் மட்டும் தாக்கியதாக கூறியுள்ளது முரண்பட்டுள்ளது என்றும், மேலும் மருத்துமனையில் மாலை 05.45 மணிக்கு சேர்ந்ததாக உள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கை 7 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு மாலை 5.45 மணிக்கே தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை என்றும் கூறி மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

(01.06) மேலும், சாட்சி–7ன் வாக்குமூலத்தில் சாட்சி–1யிடம் வாக்குமூலம் வாங்கினார், அவரிடம் கையொப்பம் பெற்றதற்கான விபரத்தை சாட்சி–7 ஆனவர் குறிப்பிடவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையை எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பினார் என்ற விபரங்கள் குறிப்பிடாமல் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.07) போலிசார் நியாயமான முறையில் விசாரணை செய்யவில்லை என்றும், சம்பவமானது பிரேமலதா மற்றும் 6 எதிரிகள் கூட்டாளிகளோடு திட்டமிட்டு என்னை அடிக்க வேண்டும் என்று அதிகப்படையுடன் வந்துள்ளார் என்றும், அவர்களிடமிருந்து தப்பித்து மருத்துவமனையில் சேர்ந்துவிட்டதாகவும், கொடுக்கப்பட்ட இரு புகாரையும் போலிசார் நியாமாக விசாரணை செய்திருந்தால் பொய் புகார் கொடுத்தது தெரியவரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.08) மேலும், குவிமுச. 41(A)–ன் படியான அழைப்பாணை நாள் 09.07.2023, FIR பதிவு செய்த தேதிக்கு சமார் 1 வருட கால தாமதத்திற்கு பின் தனக்கு வழங்கப்பட்டதாகவும், விசாரணை அதிகாரியால் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமலும் நிபந்தனைகள் பற்றிக்கூறாமலும், தன்னிடம் கையொப்பம் எதுவும் பெறாமலும் உள்நோக்கத்துடன் அழைக்கழித்தார் என்றும், உயர்நீதிமன்ற உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றாமல் அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.09) பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளது போல் 02.08.2022 ஆம தேதி காலை 20.00 மணிக்கு பார்வை மகசர் தயாரித்ததாகவோ விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு வந்ததாகவோ பார்வை மகசர் சாட்சிகள் மற்றும் இவ்வழக்கின் சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும், சாட்சி 2 முதல் சாட்சி 5 வரையான 4 பேரும் 03.08.2022 ஆம் தேதி காலை 6 மணிக்கு விசாரணை அதிகாரி வந்ததாக முரண்பட்டு கூறியுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.10) மேலும், இச்சம்பவம் பற்றி தோட்டத்தில் வேலை செய்யும் மருதமுத்து என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றும், குற்றப்பத்திரிக்கை களம் 16 ல் குறிப்பிட்டிருப்பதற்கு முரணாக சிவில் சார்ந்த பிரச்சனைகளுக்கு எவ்வித ஆதாரங்களையும் விசாரணை அதிகாரி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், அனைத்து சாட்சிகளும் முன்னுக்குபின் முரண்பாடுகள் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.11) மேலும் இவ்வழக்கை ரத்து செய்யக் கோரி சென்றை உயர் நீதிமன்றத்தில் CRLOP No.16535/2023, நாள் 25.07.2023 ல் தாக்கல் செய்யப்பட்டு இரு மாதங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் அதன்படி விசாரணை தாக்கல் செய்யப்படாததால் CONTEMPT PETITION NO.1541119/2024 நாள் 14.11.2022 ஆக தாக்கல் செய்த பின்பு போலியாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.12) மேலும், ஒரே நிகழ்ச்சியின் தொடர்பான இரு எதிர் எதிர் வழக்குகள் தொடர்வது முறையற்றதாகவும் என்பதை தோட்டா ராமகிருஷ்ணா மற்றும் பிற எதிர் மாநில அரசு ஏ.ஐ.ஆர்.1954 சென்னை 424 என்ற உச்ச நீதிமன்ற வழக்கில் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டு இவ்வழக்கில் வலுவான சந்தேகமும் முரண்பாடுகளும் இருப்பதாலும் பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்பதாலும் மனுதாரர்/எதிரியை இக்குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்க கோரியும் நஷ்ட ஈடு பெற்றுத் தரவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் கீழ்க்கண்டவாறு :</u>**

(02.01) இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல, இம்மனுவில் சொல்லப்பட்ட விவரங்களை கட்டாயமாக நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எதிரியையே சாரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(02.02) எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் 294(b), 324, 506(1) IPC–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கானது குற்றச்சாட்டு வனைவதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் உண்மை தன்மை நீதிமன்ற விசாரணையில் மட்டுமே தெரியவரும் என்றும், இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டவிதிக்கு உட்பட்டதல்ல என்றும், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முதலிலேயே தெளிவாக தெரியவருகிறது என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க போதுமானதாக உள்ளது என்றும், மேலும் வழக்காவணங்கள், முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை மற்றும் 161 வாக்குமூலங்களின் மூலம் மனுதாரர் மீது குற்றச்சாட்டு அமைக்க போதுமான முகாந்திரம் உள்ளது என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் விசாரணையின் போது கிடைக்கப்பெற்ற தகவல்கள் இக்குற்றத்தை வெளிப்படுத்துகின்றன என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(02.03) மேலும் இவ்வழக்கானது மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர்/எதிரி மீது பதியப்பட்டுள்ளது என்றும், இம்மனுவானது இவ்வழக்கை காலதாமதப்படுத்தவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பு உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(02.04) மேலும் புலன் விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் 161 வாக்குமூலங்கள் மூலம் குற்றச்சாட்டு வனைய போதுமான முகாந்திரம் உள்ளது என்றும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் "State Anticorruption Bureau Hydrapath VS P.Suriya Pragasam 1999 SCC (Criminal CRI) 373" என்ற வழக்கில் காவல் இறுதி அறிக்கையில்

தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே விடுவிப்பு செய்வதற்கு பரிசீலிக்க வேண்டும் என்று கூறுகிறது என்றும், அந்த தீர்ப்பையே மாண்புமிகு உச்சநீதிமன்றம் " state of Orissa Vs Debendra Nath Padhi, reported in 2004(8) SC (568)" என்ற வழக்கிலும் உறுதி செய்துள்ளது என்று குறிப்பிட்டு, இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலங்கள் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச் செயலை வெளிப்படுத்துகின்றன என்றும். ஆகையால் இந்த மனு சட்டப்படி பராமரிக்கத்தக்கதல்ல என்றும், எனவே அது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(02.05) மேலும் " The Hon'ble Madras High Court in Kalpagam Bhaskaran VS State Rep. By Addl. SP, CBI–ACB, Chennai (2020) 1 MLJ(rl) 345" என்ற வழக்கின்படி விசாரணை நீதிமன்றம் ஒரு விடுவிப்பு மனுவை ஆரம்ப கட்டத்தில் பரிசீலிக்கும் போது, அரசு தரப்பால் வழக்கு விசாரணைக்கு போதுமான முகாந்திரம் உள்ளதா என்பதை மட்டும் கண்டறிவதே அதன் நோக்கம் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு எதிரியின் விடுவிப்பு மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு எழுத்து மூலமான வாதுரையின் சுருக்கம் :</u>

(03.01) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை சாட்சிகளின் வாக்குமூலம் குற்றப்பத்திரிக்கையில உள்ள வலுவான சந்தேகங்கள் இவ்வழக்கை மேல் நடத்த முகாந்திரம் இல்லதது என்பதற்கான வலுவான காரணக்ஙளை டிஸ்சார்ஜ் மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் 3 முன் தீர்ப்புக்கள் கூறப்பட்டுள்ளது என்றும், மேற்படி 3 தீர்ப்புகளின் அடிப்படையில் டிஜ்சார்ஜ் மனுவின் மீது விசாரணை செய்யும் போது டிபென்ஸ்/எதிரி தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலனை செய்ய கூடாது என்பதை குறிப்பதாக சொல்லியுள்ள வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும் வாதிட்டார்.

(03.02) ஏனெனில் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் அரசு தரப்பில் குற்றப் பத்திரிக்கையுடன் தாக்கல் செய்த ஆவணங்கள் மட்டுமே தவிர புதிதாக தயார் செய்யப்பட்டது இல்லை என்றும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களில் உள்ள முரண்பாடுகள் அனைத்தும் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை no sufficient ground to

proceed என்பதை செயல்படுத்தப்பட்டு டிஸ்சார்ஜ் மனு அனுமதிக்க அனைத்து காரணிகளும் சட்டப்படி போதுமானதாக உள்ளது என்றும் வாதிட்டார்.

**சட்ட முன்தீர்ப்புகள் :**

1. Union of India Vs Prafulla Kumar & Anr on 06 November, 1978

2. P.Vijayan Vs State of Kerala & Anr on 27 January, 2010

3. State of T.Nadu Tr.Insp. Of Police Vs N. Suresh Rajan & Ors on 6 January, 2014

4. Daniel Christian Book Stall : Shoeraj Singh Ahlawat & Ors Vs State of UP Anr on 9 November 2012

5. Daniel Christial Book Stall: Kanchan Kumar Vs The State of Bihar on 14 September, 2022,

6. M.E. Shivalingamurthy Vs Central Bureau of Investigation, on 7 January 2020

7. Kanti Bhadra Shah and Anr Vs State of West Bengal on 5 January 2000

8.Smt.Om Wati & Anr Vs State through Delhi Admin, & Ors on 19 March 2001

9. State of Bihar Vs Ramesh Singh on 02 August 1977

10. Dipakbhai Jagdishchndra Patel Vs The State of Gujarat on 24 April 2019

ஆகிய உச்ச நீதிமன்ற முன் தீர்ப்புகளில் அரசு தரப்பு ஆவணங்களில் பரிசீலனை செய்து வழக்கை மேல் நடத்த போதிய முகாந்திரம் இல்லாத போது வழக்கில் இருந்து எதிரியை டிஸ்சார்ஜ் செய்யலாம் என சொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

(03.03) மேலும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் IPC 324 யை நீக்கிவிட்டு தற்போது 3 வது பேராவில் 324ன் படி குற்றம் சாட்டப்பட்டது என்று முரண்பாடாக எதிர்உரை தாக்கல் செய்துள்ளனர் என்றும் குற்ற இறுதி அறிக்கையில் சம்பவ நேரம் குறிப்பிடவில்லை எனறும், குறிப்பிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற Crl.Op. No.6737 of 2024 and Crl.M.P No.4947 and 4946 of 2024, dated 28.03.2024 என்ற சட்ட முன்தீர்ப்பையும் சுட்டிக் காட்டி இப்படிப்பட்ட வழக்குகளில் நீதிமன்றம் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய கூடாது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

(03.04) மேலும் எதிரிகளை நீதிமன்ற தண்டணையில் இருந்து காப்பாற்றுவதற்காக மேற்பண்ட தீர்ப்புகளை பற்றி நன்கு தெரிந்தும் செய்ய வேண்டியதை செய்யாமலும் செய்யக்கககூடாததை செய்தும் இவ்வழக்கில் போலியான ஆவணங்களை உருவாக்கி நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு

CRL.OP.NO.18665/2014, OT-21.04.2015, S.Selvakumar Vs Inspector of Police, AWPS, Keelakkarai, Ramanathapuram District என்ற சட்ட முன்தீர்ப்பினை சுட்டிக்காட்டியுள்ளார்.

(03.05) மேலும் இவ்வழக்கில் தன்னிடம் எவ்வித விசாரணையும் செய்யாமல் ஆர்னேஸ்குமார் எதிரி பீகார் 2014 8 SCC 273 என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வழிகாட்டலில் படி குற்றம் சாட்டப்பட்ட தன்னிடம் விசாரிக்காமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு இவ்வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களும் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**4) இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட 239 மற்றும் 250 of Cr.P.C.-ன் கீழான இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும் ?**

(04.01) மனுதாரர்கள்/எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 294(b), 506(i) மற்றும் வரதட்சணை தடுப்புச் சட்டப்பிரிவு 4 ன் படியும் எதிர்மனுதாரர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(04.02) இந்த வழக்கில் போலிசார் நியாயமான முறையில் விசாரணை செய்யவில்லை என்றும், கொடுக்கப்பட்ட இரு புகாரையும் போலிசார் நியாமாக விசாரணை செய்திருந்தால் பொய் புகார் கொடுத்தது தெரியவரும் எனவும் சொல்லப்பட்டுள்ள நிலையில், வழக்காவணங்கள், முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை மற்றும் 161 வாக்குமூலங்களின் மூலம் மனுதாரர்/எதிரி மீது குற்றச்சாட்டு அமைக்க போதுமான முகாந்திரம் உள்ளது என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் புகார்தாரரிடம் இருந்து பெறப்படும் தகவல்கள் கொள்தகு குற்றங்களாக தெரியவரும் பட்சத்தில் முதல் நிலை விசாரணை தேவையில்லை என்பது தெரியவருகிற சூழ்நிலையில் அரசு தரப்பில் இவ்வழக்கில் முதல் நிலை கொள்தகு குற்றம் தெளிவாக அறியப்பட்டதால் உடனடியாக வழக்கு பதியப்பட்டுள்ளது தெரியவருகிற நிலையில், இவ்வழக்கின் புகாரினை பரிசீலிக்கையில் 02.08.2022 ம் தேதி புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்பதும், மேற்படி புகாரில் எதிரி செல்வராஜ் தன்னை பார்த்து வாகனத்தின் முன் நிற்கிராயாடி கண்டாரோலி மகளே என்று சொல்லி கையாலும், காலாலும் என் வயிறு, நெஞ்சு மற்றும் மர்ம உறுப்பு

பகுதிகளில் அடித்தும மேலும், என் சீலையை பிடித்து இழுத்தும் என்னை மானபங்கப்படுத்தி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னதாகவும் சொல்லியுள்ள நிலையில், அரசு தரப்பில் வழங்கிய காரணம் ஏற்புடையதாக உள்ளது.

(04.03) மேலும் சாட்சி–1 ஆனவர் அவரது வாக்குமூலத்தில் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார் என்பதும், அவர் கணவர் வந்த நேரமும் குறிப்பிடவில்லை என்றும், மருத்துவமனைக்கு அழைத்து சென்ற நேரமும் குறிப்பிடபில்லை என்றும், அட்மிசன் காலதாமதம் உள்ளது குறித்து சந்தேகம் உருவாகியுள்ளது என்றும், சாட்சி–2 ஆனவரும் பிரச்சனை செய்து கெள்வதாக கேள்விப்பட்டு சம்பவ இடத்துக்கு எத்தனை மணிக்கு வநதார், எப்போது சமாதானம் செய்தார் என்று நேரம், எப்போது சமாதானம் பேசி முடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடவில்லை என்றும், சாட்சி–7ன் வாக்குமூலத்தில் சாட்சி–1யிடம் வாக்குமூலம் வாங்கினார், அவரிடம் கையொப்பம் பெற்றதற்கான விபரத்தை சாட்சி–7 ஆனவர் குறிப்பிடவில்லை என்றும் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள நிலையில் மேறப்டி சங்கதிகள் வழக்கு விசாரணையில் போது தான் முழுமையாக தெரியவரும் என்பதால் இந்த கட்டத்தில் ஆதாரங்களை மதிப்பாய்வு செய்வது முற்றிலும் நியாயமானது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(04.04) மேலும் சாட்சி–4 ஆனவர் வாக்குமூலத்தில் பார்வை மகசரில் நேரம் குறித்து முரண்பாடுகள் உள்ளது என்றும், புலன் விசாரணை அதிகாரி முரண்பாடான நேரமுடைய மோசடியான பார்வை மகசரையே தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள நிலையில், சாட்சி–4ன் வாக்குமூலத்தில் 03.08.2022 காலை 6.00 மணியளவில் போலிசார் விசாரித்ததாகவும், பார்வை மகசர், வரைபடம் தயார் செய்ததாகவும் சொல்லியுள்ள நிலையில் பார்வை மகசரை பரிசிலீக்கையில் 02.08.2022 காலை 20.00 மணி என்று காட்டப்பட்டுள்ளது தெரியவருகிற நிலையில் மேற்படி சங்கதியானது வழக்கு விசாரணையில் தீர்மானிக்க வேண்டிய சங்கதிகள் ஆகும்.

(04.05) மேலுல் சாட்சி–6ன் வாக்குமூலத்தில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் மற்றும் அடையாளம் தெரியாத இருவர் வாதியை அடித்துவிட்டதாக கூறியுள்ள நிலையில், சாட்சி–1ன் வாக்குமூலத்தில் ஒருவர் மட்டும் தாக்கியதாக கூறியுள்ளது முரண்பட்டுள்ளது என்றும் கூறியுள்ள நிலையில், புகார் வாக்குமூலத்தினைப் பரிசீலிக்கையில் செல்வராஜ் என்பவர் தன்னை காலாலும் கையாலும் அடித்ததாக

சொல்லியுள்ள நிலையில், மேற்படி சம்பவத்தின் போது வாதியானவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவருவதால் மேற்படி சங்கதியை குறித்தும் வழக்கு விசாரணையின் போது தீர்மானிக்க வேண்டிய சங்கதிகள் ஆகும்.

(04.06) மேலும் இவ்வழக்கை ரத்து செய்யக் கோரி சென்றை உயர் நீதிமன்றத்தில் CRLOP No.16535/2023, நாள் 25.07.2023 ல் தாக்கல் செய்யப்பட்டு இரு மாதங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் அதன்படி விசாரணை தாக்கல் செய்யப்படாததால் CONTEMPT PETITION NO.1541119/2024 நாள் 14.11.2022 ஆக தாக்கல் செய்த பின்பு போலியாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்று கூறியுள்ள நிலையில், பின்னிட்டு எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுதாரர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

(04.07) மேலும் மனுதாரர் தரப்பில் குவிமுச.41(A)–ன் படியான அழைப்பாணை நாள் 09.07.2023, FIR பதிவு செய்த தேதிக்கு சமார் 1 வருட கால தாமதத்திற்கு பின் தனக்கு வழங்கப்பட்டதாகவும், விசாரணை அதிகாரியால் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமலும் நிபந்தனைகள் பற்றிக் கூறாமலும், தன்னிடம் கையொப்பம் எதுவும் பெறாமலும் உள்நோக்கத்துடன் அழைக்கழித்தார் என்றும் கூறியுள்ள நிலையில், குற்ற அறிக்கையின் பேரில் இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கானது எதிரிக்கு நகல்கள் வழங்கப்பட்டு பிரிவு 313 (1)(a) பிரிவின் கீழ் குற்றங்கள் தொடர்பாகவும். குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும். வினாக்கள் எழ வேண்டி நிலுவையில் உள்ள நிலையில், இந்நீதிமன்றமானது எதிரிக்கு எதிராக குற்ற அறிக்கையில் கூறப்பட்ட பிரிவுகளின் கீழ் அரசு தரப்பில் வழங்கியுள்ள வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் குற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைவதற்கான போதுமான முகாந்திரம் உள்ளதா என்பதை மட்டுமே காண வேண்டும். இந்நிலையில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரையில் பல்வேறு உச்ச நீதிமன்ற முன் தீர்ப்புகள் இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிக்கு ஒத்துபோகும் வகையில் அமையவில்லை.

(04.08) மேலும் இந்த வழக்கில் குற்றச்சாட்டு வனையப்படுவதற்காக நிலுவையில் உள்ள நிலையில் சாட்சியங்களை மனுதாரர் தரப்பில் கூறியுள்ள மேற்படி சங்கதிகளை

பொறுத்து சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து வழக்கின் இறுதியாக தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகளாகும். மேலும் மனுதாரர் தரப்பில் எழுப்பிய விவாதங்கள் தீர்மானிக்க இந்த நிலையில் Mini Trial நடத்த இயலாது.

(04.09) மேலும் இதனைப் பொறுத்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

> In Re Bharat Princh Vs Central Bureau of Investigation and another referred in 2008 (10)SC (10) S.C, observed that in the judgment of Debendranath Padhi case reported in 2005 (1) SCC 568 at the stage of framing of charge roving and finishing inquiry is impermissible and a mini trial cannot be conducted at such stage.

என்ற சட்ட முன் தீர்ப்பின் விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

(04.10) இந்நிலையில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது குறித்து முடிவெடுக்கும் கட்டத்தில், நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டியது என்னவென்றால், குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 161 வாக்குமூலங்கள், அறிக்கைகள் மற்றும் அரசு தரப்பு தாக்கல் செய்த பிற ஆவணங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்மொழிய முதல் நோக்கு முகாந்திரம் உள்ளனவா என்பதைத் தான் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவுகள் 294(b), 506(i)–ன் கீழ் குற்றச்சாட்டு வனைய போதுமான முதல் நோக்கு முகாந்திரம் உள்ள நிலையில் இந்த கட்டத்தில் ஆதாரங்களை மதிப்பாய்வு செய்வது முற்றிலும் நியாயமானது அல்ல.

**முடிவாக, இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் திங்கள் 05 நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.05 21:32:00 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.